2012 ஏப்ரல் 17]

கொடுப்பார்கள் என்று சொன்னால் உடனடியாக அந்தப் பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்யப்படும். ஏனென்று சொன்னால், பேருந்து நிலையத்தில் இருக்கின்ற நிலம் அரசு நிலமாக இருந்தால் பிரச்சினை இல்லை. அது மற்ற துறையினுடையதாக இருந்தாலும்கூட அந்தத் துறையினுடைய செயலாளர் அவர்களிடத்திலே சொல்லி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடு அது இணைத்துக் கொள்ளப்படும். ஆனால், தனியார் நிலமாக இருக்கின்றபட்சத்தில் நிச்சயமாக அதன் சந்தை விலை மிகக் கூடுதலாக இருக்கும். அந்த நிதி ஆதாரத்தையும் நாம் உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்குகின்றபட்சத்தில் அரசு தயாராக இருக்கிறது. ஆனால், அந்தப் பரிவர்த்தனையை முடிப்பதற்கு அங்கே இருக்கின்ற உள்ளூர் தலைவருடைய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. அதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே முன் நின்று செய்து கொடுப்பார்கள் என்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக உடுமலைப்பேட்டையினுடைய பேருந்து நிலையம், அந்த இரண்டு ஏக்கர் நிலத்தோடு இணைத்து, மிகப் பெரிய அளவிலே, சிறப்பான முறையில் விரிவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் மையம்

__7346—திரு. வி.எஸ். இராஜி:__

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், பவுஞ்சூரில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியம், பவுஞ்சூர் காலனியில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட மையத்திற்கு குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வட்டார அளவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசோ, மாநில அரசோ தனியாக எதுவும் நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்திற்குள்ளேயே இந்த அலுவலகம் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைக் கற்களை எல்லாம் வெற்றியின் படிக் கற்களாக மாற்றும் வல்லமை படைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே, கற்ற நெஞ்சங்கள் நற்கலை மறந்தாலும், கண்கள் இரண்டும் நின்றிமைப்பதை மறந்தாலும், வன்மை செய்திடும் மிக வறுமை வந்தாலும், மகிழ்வு செய்ய பெருவாழ்வு வந்தாலும் தமிழ்நாட்டு மக்களின் வளம் செழிக்க நற்திட்டங்களைத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை எந்தக் காலத்திலும் மறக்க முடியாது. ஆனால், இந்த நேரத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் இலத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார அலுவலகம் தனியார் கட்டடத்தில் வாடகையிலே இயங்கி வருகிறது. அந்தக் கட்டடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நிலம் அங்கே இருக்கிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழந்தை வளர்ச்சித் திட்டமென்பது, முழுக்க முழுக்க மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்ற ஒரு திட்டமாகும்.

2012 ஏப்ரல் 17]

வாடகைக் கட்டடத்தில் செயல்படுவதற்கென்று நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிற தொகை வெறும் ரூ.3,500/– மட்டுமே. இதற்குத் தனியாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு எந்தவிதமான வழிகாட்டுதலும் மத்திய அரசால் வழங்கப்படவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலகக் கட்டடங்கள் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில், பொதுப் பணித் துறையின் மேற்பார்வையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அந்த வளாகங்களிலேயே இந்தத் திட்ட அலுவலகங்கள் செயல்படுவதற்கு அனுமதித்து, அதன் அடிப்படையிலே இன்றைக்கு அந்த அலுவலகம் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அலுவலகமானது வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. அதற்கான இடம் இருக்கிறது. அங்கன்வாடி கட்டடமாக இருந்தால், அதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுத்துவிடலாம். இந்த ஆண்டு மட்டும் 6 அங்கன்வாடிக் கட்டடம் கட்டுவதற்கு நிதி கொடுத்திருக்கின்றோம். ஆனால், இது பெரிய வட்டார அலுவலகம் என்பதால் இதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் என்பது வட்டார வளர்ச்சி அலுவலகக் கட்டடங்களுக்குள்ளேயே செயல்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற அங்கன்வாடி மையங்கள், இந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு வந்து அவர்களிடத்திலே பல்வேறு நலப் பணிகளைப் பெற்றுக்கொண்டுபோய் மையங்களிலே செயல்படக்கூடிய அந்த அலுவலகப் பணிகள் இருக்கின்ற காரணத்தினால்தான், அவர்களுக்கு வசதியாக வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு உள்ளேயே செயல்பட்டு வருகிறது. அதற்காக வேறு இடங்களிலே இருக்கிறபோது, அவர்கள் அங்கேயிருந்து

வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு வந்து, அந்தந்த வாரத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களையோ அல்லது தேவையான நிதியினையோ பெற்றுக்கொண்டு செல்வதற்கு வசதியாக இருக்காது என்ற காரணத்தினால்தான், அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குள்ளேயே அந்தக் கட்டடம் இயங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

வன அலுவலகக் கட்டடம்

**4023—திருமதி ம. சக்தி:*

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலுள்ள வனச் சரக அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழியைத் தலைமையிடமாகக் கொண்டு சீர்காழி வனச் சரக அலுவலகம், தற்சமயம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகம் இயங்க சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வனத் துறைக்குச் சொந்தமான நிலம் எதுவும் சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இல்லை. மேலும், சீர்காழி நகராட்சி எல்லைக்கு அருகில் காப்புக் காடுகளும் இல்லை. சீர்காழி வனச் சரகம் பழமை வாய்ந்த சரகம் என்பதால், அச்சரகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்து தரும்படி, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரிடம், நாகப்பட்டினம் வன உயிரினக் காப்பாளர் அவர்களால் கேட்கப்பட்டுள்ளது. இதற்கான